Praise the Lord: Let us Pray

## பிரசங்கி / Ecclesiastes 9:2-3

எல்லாருக்கும் எல்லாம் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கும்; சன்மார்க்கனுக்கும் துன்மார்க்கனுக்கும், நற்குணமும் சுத்தமுமுள்ளவனுக்கும் சுத்தமில்லாதவனுக்கும், பலியிடுகிறவனுக்கும் பலியிடாதவனுக்கும், ஒரேவிதமாய்ச் சம்பவிக்கும்; நல்லவனுக்கு எப்படியோ பொல்லாதவனுக்கும் அப்படியே; ஆணையிடுகிறவனுக்கும் ஆணையிடப் பயப்படுகிறவனுக்கும் சமமாய்ச் சம்பவிக்கும். எல்லாருக்கும் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கிறது சூரியனுக்குக் கீழே நடக்கிறதெல்லாவற்றிலும் விசேஷித்த தீங்காம்; ஆதலால் மனுபுத்திரரின் இருதயம் தீமையினால் நிறைந்திருக்கிறது; அவர்கள் உயிரோடிருக்கும் நாளளவும் அவர்கள் இருதயம் பைத்தியங்கொண்டிருந்து, பின்பு அவர்கள் செத்தவர்களிடத்திற்குப் போகிறார்கள்.

All things come alike to all: One event happens to the righteous and the wicked; To the good, the clean, and the unclean; To him who sacrifices and him who does not sacrifice. As is the good, so is the sinner; He who takes an oath as he who fears an oath. This is an evil in all that is done under the sun: that one thing happens to all. Truly the hearts of the sons of men are full of evil; madness is in their hearts while they live, and after that they go to the dead. (NKJV)

இன்றைய உலகின் நடைமுறை இதுதான்……இதனால்தான் மக்கள் குழப்பமடைந்து…. அவரவர்கள் எண்ணங்களின்படி முடிவெடுத்து வாழ்கிறார்கள்.

This is the normal world situation. So people get confuse and take their own decision to live…

## பிரசங்கி / Ecclesiastes 9:4

இதற்கு நீங்கலாயிருக்கிறவன் யார்? உயிரோடிருக்கிற அனைவரிடத்திலும் நம்பிக்கையுண்டு; செத்த சிங்கத்தைப்பார்க்கிலும் உயிருள்ள நாய் வாசி.

But for him who is joined to all the living there is hope, for a living dog is better than a dead lion. (NKJV)

இந்த நம்பிக்கை சரியாக இருக்குமானால், குழப்பமில்லை.

If we have the right hope, then there is no confusion….

## ரோமர் / Romans 6:23

பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.

For the wages of sin is death, but the gift of God is eternal life in Christ Jesus our Lord.

மரணம்-நித்தியஜீவன், நரகம்-சொர்க்கம், பாவம்-புண்ணியம். Death-Eternal Life, Hell-Heaven, Sin-Righteous

## யோவான் / John 3:16

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

For God so loved the world that He gave His only begotten Son, that whoever believes in Him should not perish but have everlasting life.

இப்படிப்பட்ட விசுவாசம்….அதாவது நம்பிக்கை….This Faith…that is Hope….

## எபிரெயர்/ Hebrews 11:1

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.

Now faith is the substance of things hoped for, the evidence of things not seen.

இந்த நம்பிக்கையின் உறுதி நம்மிலே இருக்குமானால்……If we have this Faith…

## ரோமர் / Romans 8:28

அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம

And we know that all things work together for good to those who love God, to those who are the called according to His purpose. (Now read again verse Ecclesiastes 9:2-3)

இப்பொழுது **பிரசங்கி / Ecclesiastes 9:2-3** ல் வாசித்ததை மீண்டும் கவனியுங்கள்....

என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (யோவான் 6:47)

Most assuredly, I say to you, he who believes in Me has everlasting life.

ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

Most assuredly, I say to you, if anyone keeps My word he shall never see death." (யோவான் / John 8:51)

நம் ஜீவனை பரிபூரணப்படுத்த வந்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை தொடர்ந்து வாசித்து தியானித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். இந்த வார்த்தை ஜீவனுள்ளது. இது நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்க வல்லது. இதை நீங்களே உணர்ந்து கொள்ள ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

Lord Jesus Christ is giving us eternal life. Please read his living Word further. God Bless You.

Let us Pray